# முதல் திருப்புதல் தேர்வு – 2025

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்:100

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14x1=14

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்
2. பிளிட்ஸ்கிரிக் என்றால் ________
   அ) மின்னல் வேக தாக்குதல் ஆ) பதுங்குக் குழிப்போர்
   இ) நீர் மூழ்கிக் கப்பல் போர் ஈ) கொரில்லாப் போர்
3. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?
   அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம சமாஜம் இ பிரார்த்தன சமாஜம் ஈ) ஆதிபிரம்ம சமாஜம்
4. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
   அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10 இ) 1806 ஜூலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10
5. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?
   அ) TM. நாயர் ஆ) P. ரங்கையா இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A. நடேசன்
6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு?
   அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்
7. இந்தியாவின் உயரமான புவியீர்ப்பு அணை?
   அ) ஹிராகுட் அணை ஆ) பக்ராநங்கல் அணை
   இ) மேட்டூர் அணை ஈ) நாகார்ஜுனா சாகர் அணை
8. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
   அ) சேலம் ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்
9. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் எது?
   அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்
10. இந்தியாவின் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது?
    அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை
11. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr.BR.அம்பேத்கர் அவர்களால் இந்திய அரசியலமைப்பின் "இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது?
    அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
    இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை
12. இன ஒதுக்கல் கொள்கை என்பது
    அ) ஒரு சர்வதேச சங்கம் ஆ) இராஜதந்திரம்
    இ) ஒரு இனப்பாகுபாட்டுக் கொள்கை ஈ) மேற்கூறியவை எதுவுமில்லை
13. காட் (GATT) இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்?
    அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனிவா
14. குழாய்கள் மற்றும் நீரிரைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யுமிடம்?
    அ) சேலம் ஆ) கோயமுத்தூர் இ) சென்னை ஈ) தருமபுரி

### பகுதி – ஆ

II **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 28 கட்டாய வினா** 10x2=20

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?
16. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.
17. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப் பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக?
18. தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக?
20. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



21. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?
22. தகவல் தொடர்பு என்றால் என்ன?
23. தமிழ்நாட்டின் வேளாண்பருவங்களைக் குறிப்பிடுக?
24. நிதிமசோதா – குறிப்பு வரைக?
25. பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
26. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
27. உலகமயமாக்கல் என்றால் என்ன?
28. பனிப்போர் என்பது பற்றி குறிப்பு எழுதுக?

பகுதி – இ 10x5=50

III ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா 42 கட்டாயமாக விடையளிக்கவும்.

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:–
 1) போயர்கள் _______ என்று அழைக்கப்பட்டனர்.
 2) கரிசல் மண் _______ என்று அழைக்கப்படுகிறது.
 3) சாத்தனூர் அணை _______ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
 4) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் _______
 5) _______ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க?
31. 19ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்றசூழ்நிலைகளை விளக்கவும்?
32. வேறுபடுத்துக : அ) 1) வானிலை மற்றும் காலநிலை
 2) புதுப்பிக்கக் கூடிய மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்
 காரணம் கூறுக ஆ) மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.
33. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.
34. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக?
35. ஏதேனும் இரண்டு பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக?
36. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
37. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
38. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
39. GDP கணக்கிடும் முறைகள் யாவை?
40. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக?
41. 1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகளுக்கு உட்பட்ட ஏதேனும் ஐந்து வரலாற்று நிகழ்வினை காலக்கோடு வரைக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிப்பிடுக?
 1) சம்பரான் 2) வேதாரண்யம் 3) ஜாலியன் வாலாபாக் 4) பராக்பூர் 5) ஜான்சி

பகுதி – ஈ 2x8=16

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

43. அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக?
 *(அல்லது)*
 ஆ) 1857 ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்?
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்
 1) எவரெஸ்ட் 2) கரிசல் மண் பகுதி ஒன்று 3) பாக்நீர் சந்தி
 4) மும்பை ஹை 5) கட்ச் வளைகுடா 6) சோழ மண்டல கடற்கரை
 7) சென்னை 8) சோட்ட நாக்பூர் பீடபூமி
 *(அல்லது)*
 ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்
 1) சென்னை 2) தொட்டபெட்டா 3) கன்னியாகுமரி
 4) சேலம் 5) காவிரி ஆறு 6) மன்னார் வளைகுடா
 7) அகஸ்தியர் மலை 8) வங்காள விரிகுடா

***/***

CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com